உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.364/2025

பெயர் :பஞ்சு(அ.சா.1)
தகப்பனார் பெயர் :வெள்ளையன்
கணவர் பெயர் :
வயது :63
கிராமம் :மாயாண்டிபட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

17.03.2026

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் கணேசன், ஆகாஷ் என்ற மலையரசன், ராஜேஷ்வரி ஆகியோர் ஆஜர்எதிரிகள் ஆவர். 12.09.2023 அன்று செவ்வாய்கிழமை இரவு சுமார் 8-9 மணியளவில் ஆஜர் 1ம் எதிரி கணேசன் என் மகன் முத்துபாண்டியிடம் தகாத வார்த்தையை கொண்டு என் மகனை பேசி என்னை பேசியும் எங்கடா அவன்தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். பேசிக்கொண்டிருக்கும் போது என் மகன் வரவே என் மகன் முத்துபாண்டியை கத்தியை வைத்து அவருடைய தலையில் வெட்டிவிட்டார். கணேசன் தான் வெட்டினார். கணேசன் மனைவி பெயர் ராஜேஷ்வரி ஆஜர் 3வது எதிரி, ஆகாஷ் என்ற மலையரசன் கணேசனின் அண்ணன் மகன் ஆவார். தரண்யா, தரண் ஆகியோர் கணேசனின் மக்கள் ஆவர். கணேசன் என்மகனுடைய தலையில் வெட்டினார். அவர் வெட்டியவுடன் என் மகன் தலையில் கீழே விழுந்துவிட்டார் .நான் வந்து அவை கேட்டேன். என்னையும் கணேசன் ஆஜர் 2வது எதிரி ஆகாஷ், இருவரும் சேர்ந்து என்னை வலதுகையிலும்,தலையிலும் வெட்டிவிட்டார்கள். தலையில் வெட்ட வந்போது நான் கையை ஓங்கி மறித்தேன். கையில் வெட்டுப்பட்டது. எனக்கு கையே வலைந்துவிட்டதாக சாட்சி வலது கை மணிக்கட்டை காட்டுகிறார். சாட்சி தாமாக முன்வந்து தன்னுடைய தலையில் வெட்டுப்பட்ட காயத்தோடு உள்ள புகைப்படங்களை காட்டுகிறார்

மேற்படி ஆவணங்கள் தொடர்பான இந்திய சாட்சிய சட்டம் 65B சான்றிதழ் இல்லாத காரணத்தினால் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. சாட்சியிடம் கத்தியும், கட்டையும் காட்டப்பட்டு அதை சாட்சி பார்வையிட்டு எதிரிகள் ஆகாஷ், தருண், தரண்யா ஆகியோர் கட்டையை வைத்து தாக்கியதாகவும், 1வது எதிரி கணேசன் கத்தியை வைத்திருந்தாகவும் சாட்சி குறிப்பிடுகிறார். சாட்சியிடம் கத்தி ஒன்று காட்டப்பட்டு அதை கொண்டு கணேசன் தாக்கியதாக குறிப்பிடவே மேற்படி பொருளானது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் 2 உருட்டுகட்டைகள் காட்டப்பட்டு, 3 உருட்டுகட்டைகள் கொண்டு தன்னை தாக்கியதாகவும், அதை தருண் என்றநபர் தன்னை தாக்கியதாகவும் சாட்சி குறிப்பிடுகிறார். மேற்படி 2 உருட்டுகட்டைகள் அ.சா.பொ.2 மற்றும் அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அடிபட்டவுடன் மயங்கிவிழுந்துவிட்டேன். என் மகள் ஆனந்தஜோதி 108 ஆம்புலன்சில் தகவல் கொடுத்து ஏற்றிவிட்டார். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டேன். அதன்பிறகு காவலர்கள் என்னை விசாரித்தார்கள் வாக்குமூலம் பெற்றார்கள் சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டுஅதில் உள்ள கைரேகை தன்னுடையது என்றும் அதில் உள்ள வாக்குமூல் தான் கொடுத்தது என்று கூறவே அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவலர்கள் விசாரித்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எனதுபெயர் பஞ்சு தான். பஞ்சுகாளை கிடையாது. எனதுஅண்ணன் பெயர் அய்யாவு என்றால் சரிதான். அய்யாவுவுடைய மகன் தான் ஆஜர் 1ம் எதிரி கேணேசன் என்றால்ச ரிதான். ஆஜர் 3ம் எதிரி என் அண்ணன் மருமகள் என்றால் சரிதான். ஆஜர் 2ம் எதிரிஎன் அண்ணனுடைய இன்னொரு பேரன் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் என்னையும்

சேர்த்து 7 பேர் 4 ஆண்கள், 3 பெண்கள். எனக்கு 3 பெண்குழந்தைகள் ஒரு மகன். 3 பெண்கள் பெயர் பழனியம்மாள், பாண்டியம்மாள், ஆனந்தஜோதி என்றால் சரிதான். ஆனந்த ஜோதி இந்த வழக்கில் 4வது சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். முத்துப்பாண்டி என் மகன் இந்த வழக்கில் 2வது சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். கருப்பாயி என்பவர் எனது மனைவி ஆவார் அவர் இந்த வழக்கில் 3வது சாட்சி. இந்த வழக்கில் கண்ணன் மகன் முத்துகுமார் என்று சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள நபர் யாரென்று எனக்கு தெரியாது. என் 2 மகள்கள் பாண்டியம்மாள் மற்றம் பழனியம்மாள் என் விருப்பத்தையும் மீறி காதல் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதன்பின்னால் 2 மகள்களையும் நான் முதலில் நான் சேர்த்து கொள்ள்ளவில்லை என்றால் சரிதான். அதன்பின்னால் சமரசம் ஆகிவிட்டோம். நான் பேசிகொள்ளாத காலகட்டத்தில் என் அண்ணன் மகன் ஆஜர் 1ம் எதிரி என் 2 மகள்களுக்கும் நல்லது கெட்டது பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு பாண்டியம்மாளை திருமணம் செய்த முத்துபாண்டியுடன் இணக்கமாகி அவரையும் சமாதானமாக ஏற்றுகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி முத்துப்பாண்டியும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. பழனியம்மாளோடு, நான் தற்போது பேசுவது இல்லை என்றால்ச ரியல்ல. பேசிகொள்வோம். வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், பழனியம்மாள் வீட்டு விசேசத்திற்கு நான் செல்லாமல் ஆஜர் 1ம் எதிரியை மாமன் என்ற முறையில் அனுப்பி வைத்தேன் என்றும் பொருட்களை வாங்கிகொடுத்துஅனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. நானும், எனது மகன் முத்துபாண்டியும் தனித்தனியாக வசித்துவருகிறோம் என்றால் சரிதான். என் மருமகள் பாண்டிசெல்வியை என் மகன் முத்துபாண்டியை சண்டையிட்டு விரட்டி அவர்கள் இருவரும் தனியாக வசித்துவருகிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2வது சாட்சியான எனது மகன்

முத்துபாண்டியையும் என்னையும் எனது மனைவியையும் அடித்துவிரட்டிவிட்டு நான் தனியாக வசித்துவருகிறோம் என்றால்ச ரியல்ல. நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும், என்னையும் என்மனைவியையும் பலமுறை என் மகன் முத்துபாண்டி அடித்துவிரட்டி விட்டு ஊர்க்காரர்களை பஞ்சாயத்துக்கு அழைத்து,அவர்கள் காவல்நிரைலய்தில் புகார் கொடுத்து என்னை தனியாக குடியமர்த்தியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் தற்போது மாரியம்மாள் வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால்சரியல்ல. ஆடு கட்டிபோட்டு வருகிறேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் மாரியம்மாள் வீட்டில் தான் வாடகைக்கு தற்போது வசித்துவருகிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகே உறவினர்கள் இருக்கிறார்களா என்றால் உறவினர்கள் இல்லை. வேறு ஆட்கள் இருக்கிறார்கள். என் வீட்டிற்கு அருகே இருந்தவர்களுக்கு நடந்த சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியவில்லை. என் மகன் ஆனந்த ஜோதி தான் ன்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் அருகில் நிறைய நபர்கள் இருந்தார்ககள். நான் முதலில் மாயாண்டிபட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முதலில் சென்றுவிட்டு தான் அதன்பிறகு மேல்சிகிச்சைக்கு மதுரைக்கு சென்றேன். எனக்கு மதுரைக்கு செல்லும் போது சுயநினைவே இல்லை. நான் சம்பவம நடந்த மறுநாள் தான் நான் கண்விழித்தேன். மதியம் சுமார் 3.00 மணியளவில் தான் கண்விழித்தேன். என்னையும் அ.சா.2 முத்துபாண்டியையும் ஒரே ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள். என் மகனுக்கு துணையாக பெரியசாமி, மாரிமுத்து ஆகியோர் உடன் வந்திருந்தார்கள். மறுநாள் தான் என் மருமகள் பாண்டிசெல்வி வந்தார். என் மகன் முத்துபாண்டி என்ன நிலையில் இருந்தார் என்றால் அரைமயக்கத்தில் இருந்தார். அவர் பேசும் நிலையில் தான் இருந்தார். இரவு முழுவதும் பேச்சு இல்லை. விடியற்காலையில் தான் அவரும் பேசினார். நானும் என் மகனும்நேரடியாக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றுவிட்டோம்.

மாயாண்டிபட்டி மருத்துவமனைக்கு என் மகனையும் அழைத்து சென்றார்கள். நான் மயக்கம் தெளிந்த பிறகு தான் காவலர்களிடம நடந்தவற்றை கூறி ரேகை வைத்தேன். என் மகன் தனியாக சிகிச்சை எடுத்துவந்தார். அவரையும் போலிசார் விசாரணை செய்தார்கள். நடந்த அனைத்து சம்பவத்தை நான் காவலர்களிடம் தெரிவித்துள்ளேன். குறிப்பாக எந்த ஆயுதத்தை கொண்டு என்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். விசாரணை முடிவடைந்து என்னிடம் வெற்றுதாளில் கைரேகை வாங்கப்பட்டதாஎன்றால் இல்லை. அதை முழுவதுமாகபூர்த்தி செய்து தான் கைரேகை வாங்கினார்கள். நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி புகாரை என் மகள் படித்து காட்ட நான் தெரிந்து கொண்டேன். புகாரில் உள்ள விபரங்களை நான் தான் கூறினேனா என்றால் சாட்சி தன் மகள் கூறியதாக குறிப்பிடுகிறார். நான் 5 நாட்கள் மதுரை அரசுமருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். என் மகன் முத்துப்பாண்டி போதையில் பெற்றோர் என்று பாராமல் என்னையும் என்மனைவியையும் தாக்கி இதுதொடர்பாக ஒத்தக்கடை காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் அது சரியல்ல. பணம் காசு கொடுக்கவில்லை என்று என்னிடம் சத்தம்போடுவது தான், அடிக்கவில்லை. முத்துப்பாண்டி என்மகள்களை நான் குடும்பத்தில் சேர்த்து கொண்டதால் என்னையும் என் மனைவியையும் மதிப்பது கிடையாது என்றும் என்னை அவ்வப்போது அடித்து துன்புறுத்துவதே வழக்கம் என்றால் சரியல்ல. என் மகள் பழனியம்மாள் வீட்டு விசேசத்திற்கு நான் பொருட்கள் கொடுத்த காரணத்தை தெரிந்து கொண்ட என் மகன் முத்துபாண்டி கூரையில் இருந்து காலி செய்து என்னையும் என் மனைவியையும் அடித்து துரத்தி துன்புறுத்தி துரத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.அந்த செட் தற்போது வரை அப்படியே தான் இருக்கிறது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எனக்கும் என்

மகன் முத்துபாண்டிக்கும் இடையே ஏற்பட்ட சண்டையின் காரணமாக தான் வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தொடர்பாக என் மகன் புகார் கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். இந்த வழக்கு தொடர்பாக முத்தணன் என்ற நபர் மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. T.கோவில்பட்டிகாரர் யார் மீதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. காவலர்கள் விசாரணையின் போது யார் யார் என்னென்ன ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்றும் யார் யார் தாக்கினார்கள் என்பதையும் தெளிவாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். என் மகனை, என் மகள்களை எப்போது போலிசார் விசாரணை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நினைவில்லை. நான் சொன்னதுபோல் சொன்னதேதியில் சொன்னநேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சண்டையே முத்துப்பாண்டிக்கும் எனக்கும் நடந்த சண்டை தான் என்றும், என்மகள்களுக்கு ஆதரவாக ஆஜர் எதிரிகள் உதவியதால் அவருக்கு எதிராக பொய்யாக இந்த வழககை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்றும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதால் இந்த வழக்கில் இருநது விடுதலை செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.17 20:01:19 +0530

Assistant Sessions Judge
Melur